தரம் 07

முதலாம் தவணைப் பரீட்சை ~ 2018

2883

வரலாறு

நேரம் : 2 மணித்தியாலம்

சேர்விலக்கம் :

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01) சேனையைக் குறிப்பிடக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட சொல்
1. சேன் 2. நவதெனி 3. பிடபிம் 4. களம்

02) பண்டுகாபய மன்னன் சிறு வயதில் வாழ்ந்ததாகக் கருதப்படும் இடம்
1. மாகம 2. தொரமடலாவ 3. மின்னேரியா 4. லபுனொருவ

03) இரும்புக் கைத்தொழிலை மேற்கொள்ளும் நபர் பின்வரும் எப்பெயரால் அழைக்கப்படுவார்?
1. லோகுரு 2. தம்பகர 3. கும்பல்லு 4. ரன்கருவன்

04) ஹோப்பிடிகம சந்தைக் கல்வெட்டை நிறுவிய மன்னன்
1. பாதிகாபயன் 2. 4ஆம் உதயன் 3. மஹா சேனன் 4. வசபன்

05) சுவையான உணவைச் சமைத்ததாக சத்தர்மலங்கார எனும் நூலில் குறிப்பிடப்படும் பெண்
1. லீலாவதி 2. பத்மாவதி 3. விகாரமஹாதேவி 4. அசோகமாலா

06) பாண்டிய தேசத்தை வெற்றி கொண்ட மாணவர்ம வம்சத்து மன்னன்
1. 2ஆம் சேனன் 2. 4ஆம் அக்ரபோதி 3. முதலாம் சேனன் 4. மாணவர்மன்

07) தென்னிந்திய அரசான பல்லவ அரசின் தலைநகர்
1. மதுரை 2. காசி 3. சேலம் 4. காஞ்சி புரம்

08) சோழர்களால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட அநுராதபுர மன்னன்
1. 1ஆம் விஜயபாகு 2. 5ஆம் மஹிந்தன்
3. 2ஆம் சேனன் 4. 1ஆம் தப்புலன்

09) முன்னைய மன்னர்களால் கடைபிடித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளைக் குறிப்பிட பயன்படுத்தும் சொல்
1. அந்தானி 2. கம்லதன் 3. பெரசிரித 4. சட்டம்

10) 1ஆம் விஜயபாகு சோழர்களிடம் தோல்வியடைந்து தப்பிச் சென்ற இடம்
1. கதிர்காமம் 2. மலையகம் 3. பொலநறுவை 4. வாக்கிரிகல

Scanned by CamScanner

♦ **சரி, பிழை கூறுக.**

11) வபிகமிக என்பது குளக் கிராமங்களாகும். ( )

12) சூடடிக்கப்பட்ட நெல்லைப் பாதுகாக்க வேளாண்மைக் கதிர் பயன்படுத்தப்படும். ( )

13) வர்த்தகச் சங்கங்கள் புக எனும் பெயரால் குறிப்பிடப்படும். ( )

14) தாதுசேனன் மோரிய வம்சத்தைச் சேர்ந்தவன் ( )

15) பனாகடுவ செப்பேட்டில் முதலாம் விஜயபாகு சோழர்களை வெற்றி கொண்டமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது ( )

♦ **இடைவெளி நிரப்புக.**

16) ..... என்பது கரைநெல்லைக் குறிக்கும்.

17) தாய்க்கு பணிவிடை செய்ததாக ..... மன்னனை மஹாவம்சம் குறிப்பிடுகின்றது.

18) சூடடிக்கப் பயன்படுத்தும் இடம் ..... ஆகும்.

19) சிறுவயதில் கீர்த்தி என ..... மன்னன் அழைக்கப்பட்டான்.

20) விகாரை நிர்வாகம் பற்றி ..... கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

(8ஆம் அக்ரபோதி, சாலி, 1ஆம் விஜயபாகு, மிஹிந்தலை, களம்)

Scanned by CamScanner


பகுதி II

◆ **முதலாம் வினா உட்பட எல்லாமாக 05 வினாக்களுக்கு விடை தருக.**

1) a) 1. மூன்று போகங்களிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடும் கல்வெட்டு எது?
   2. பாலுக்காக வளர்க்கப்படும் பசுக்கள் எப் பெயரால் அழைக்கப்படும்?
   3. மட்பாண்ட உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கருவி எது?
   4. உழைப்புக்கு உழைப்பை பரிமாற்றிக் கொள்ளும் முறை எப் பெயரால் அழைக்கப்படும்?

(04 புள்ளிகள்)

b) 1. இப் படத்தில் காட்டப்படுவது என்ன?
   2. இதில் காணப்படும் உருவம் 02 தருக.
   3. இது எங்கு கண்டெடுக்கப்பட்டது?



(04 புள்ளிகள்)

c)



1. இப்படத்தில் காட்டப்படுவது என்ன?
2. இது எங்கு காணப்படுகின்றது?
3. இது எந்த மன்னனால் உருவாக்கப்பட்டது?
4. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் யாது?

(04 புள்ளிகள்)

2) 1. சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட படிமுறைகளைச் சுருக்கமாகத் தருக.
   2. பண்டைய விவசாயிகளால் சேனையைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 02 தருக.
   3. சேனையில் பயிரிடப்படும் பயிர்கள் 04 தருக.

(03 X 04 புள்ளிகள்)

3) 1. நெற்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் 04 தருக.
   2. நெற்செய்கையைப் பாதுகாக்கும் பாரம்பரிய முறைகள் 02 தருக.
   3. புராதன விவசாயிகள் விலங்கு வளர்ப்பினால் பெற்றுக் கொண்ட அனுகூலங்கள் 02 தருக.

(03 X 04 புள்ளிகள்)

4) 1. ஹோப்பிடிகம சந்தைக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் வர்த்தக சட்டங்கள் 02 தருக.
   2. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் 04 தருக.
   3. இலங்கை புராதன காலத்தில் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொண்ட நாடுகள் 04 தருக.

(03 X 04 புள்ளிகள்)

Scanned by CamScanner

5) 1. மானவர்ம வம்ச ஆட்சியாளர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
2. 2ஆம் சேன மன்னனால் ஆற்றப்பட்ட சேவைகள் 02 தருக.
3. அநுராதபுர யுகத்தில் அரசுரிமை கிடைக்கப்பெற்ற இரு முறைகளைக் குறிப்பிடுக.

(03 X 04 புள்ளிகள்)

6) 1. அநுராதபுர யுகத்தில் நடைமுறையில் இருந்த சட்டத் தொகுதிகள் 02 தருக.
2. புராதன அநுராதபுரத்தில் சமூக நலன்புரி விடயங்களில் அக்கறை செலுத்திய இரு மன்னர்களையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சமூக சேவைகள் ஒன்று வீதமும் குறிப்பிடுக.
3. பின்வரும் நிர்வாகப் பிரதேசங்களின் நிர்வாகிகளைக் குறிப்பிடுக.
i. மத்திய நிர்வாகம் ii. கிராமம்

(03 X 04 புள்ளிகள்)

7) 1. முதலாம் விஜயபாகுவின் வரலாறு பற்றிக் கூறும் மூலாதாரங்கள் 02 ஐக் குறிப்பிடுக.
2. முதலாம் விஜயபாகுவின் அரசியல் பணிகள் 02 தருக.
3. முதலாம் விஜயபாகுவின் சமயப் பணிகள் 02 ஐக் குறிப்பிடுக.

(03 X 04 புள்ளிகள்)

Scanned by CamScanner